# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதிவிசேஷமானது

අංක 14,553—1965 නොවැම්බර් 11 වැනි බ්‍රහස්පතින්ද—1965.11.11

14,553 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 11 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம்

58 (4) (எ) என்னும் பிரிவின்கீழான கட்டளை

1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 58 ஆம் பிரிவின் (4) (எ) என்னும் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு நிதியமைச்சராகிய உக்குபண்டா வன்னிநாயக்க ஆகிய நான் இக்கட்டளையின் மூலம் இதற்குள்ள அட்டவணையிற்றரப்பட்டுள்ள வகுப்பைச் சேர்ந்த அல்லது விவரணமுள்ள ஆதனத்தை மேற்சொல்லப்பட்ட பிரிவின் (1), (2), (3) ஆகிய உட்பிரிவுகளின் நோக்கங்களுக்கெனக் குறிப்பிட்டுக் காட்டுகிறேன்.

யூ. பி. வன்னிநாயக,
நிதி அமைச்சர்.

கொழும்பு,
1965 ம் ஆம் நவெம்பர் மீ 11 ந் உ.

அட்டவணை

1. சீரி லிமிற்றெட் தாபனத்தில் திரு. டி. ஏ. நீல் என்பவருக்கு இக்காலத்து உரியதாயுள்ளதும் ஹம்பேக்கிலுள்ள மார்கரீன் யூனியன் ஜி. எம். பி. எச். சுக்கு மாற்றப்படவுள்ளதுமான பத்து ரூபாய்ப் பங்கு ஒன்று.

2. சீரி லிமிற்றெட் தாபனத்தில் திரு. ஜே. சி. போர்னல் என்பவருக்கு இக்காலத்து உரியதாயுள்ளதும் ஹம்பேக்கிலுள்ள மார்கரீன் யூனியன் ஜி. எம். பி. எச். சுக்கு மாற்றப்படவுள்ளதுமான பத்து ரூபாய்ப் பங்கு ஒன்று.

3. சீரி லிமிற்றெட தாபனத்தில், கொலோன் நகரத்து டொயிஷ்ச ஜெசல் சாவ்ட் வியர் வியட்சாவ்லிசே சமனபயிட் (என் விக்லுங் செல் சாவ்ட்) எம். பி. எச். தாபனத்துக்கு இக்காலத்து உரியனவாயுள்ளனவும் ஹம்பேக்கிலுள்ள சீரி இம்போட் ஜி. எம். பி. எச். அன்ட் கோவுக்கு மாற்றப்பட உள்ளனவுமான 228,876 பத்து ரூபாய்ப் பங்குகள்.

11—570.


இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில் இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.